# ERODE DISTRICT AMATEUR KABADDI ASSOCIATION

(Affiliated to Tamilnadu Amateur Kabaddi Association)

No. 60, Saradhamariamman Kovil Street, Gobichettipalayam, Erode - 638 452.

| Chairman | President | Secretary (Incharge) | Treasurer | Organizing Secretary |
|---|---|---|---|---|
| **S.K.Ramasamy. LIC** | **P.Rajakumar** | **A.C.Thangavel** | **P.Vijayakumar** | **K.Gangadharan** |
| Sundakkapalayam | Gobichettipalayam<br>97892 23379<br>yazhinirajkumar2000@gmail.com | Joint Secretary<br>Chennimalai<br>99415 21256 | Erode<br>98427 53547 | Erode<br>**K.Velliangiri**<br>Chennimalai |


DATE : 28.04.2026

## ஈரோடு மாவட்ட அமெச்சூர் கபாடி அசோசியேஷன்

## வளர்ச்சிக் குழுவின் பணிகள் \ (DEVELOPMENT COMMITTEE)

1. சங்க வளர்ச்சிக்குழு (Development Committee) உறுப்பினர்கள் அனைவரும் அவர்களுடைய ஊரில் மற்றும் அருகாமையில் நடைபெறும் மாவட்ட (EDAKA) மற்றும் மாநிலத்தில் (TNAKA) பதிவு செய்யப்பட்ட கபாடி போட்டிகளுக்கு நேரில் சென்று பார்வையிட வேண்டும்.

2. மாவட்ட கபாடி கழக திட்டங்களை வீரர்கள், வீராங்கனைகளிடம் கொண்டு சேர்க்க வேண்டும்.

3. மாவட்ட, மாநில அளவில் கபடி விளையாட்டை வளர்க்க EDAKA - அமைப்புடன் இணைந்து பாடுபடவேண்டும்.

4. பள்ளி, கல்லூரி, மற்றும் கிராம நிலைகளில் இருந்து கபாடி விளையாட்டை ஊக்குவிக்க வேண்டும்.

5. இளம் திறமையான வீரர்கள் மற்றும் வீராங்கனைகளை தேர்வு செய்து பயிற்சி அளிக்க முயற்சி மேற்கொள்ள வேண்டும்.

6. கிராமப்புறங்களில் வளரும் இளம் வீரர்கள், வீராங்கனைகளின் திறமைகளை கண்டறிந்து அவர்களுக்கு வழிகாட்ட வேண்டும்.

7. மாவட்ட, மாநில, தேசிய அணிகளுக்கு விளையாட திறமையான இளம் வீரர்கள், வீராங்கனைகளை உருவாக்க EDAKA-வுடன் இணைந்து பாடுபட வேண்டும்.

| Chairman | President | Secretary (Incharge) | Treasurer | Organizing Secretary |
|---|---|---|---|---|
| S.K.Ramasamy. LIC | P.Rajakumar | A.C.Thangavel | P.Vijayakumar | K.Gangadharan |
| Sundakkapalayam | Gobichettipalayam<br>97892 23379<br>yazhinirajkumar2000@gmail.com | Joint Secretary<br>Chennimalai<br>99415 21256 | Erode<br>98427 53547 | Erode<br>K.Velliangiri<br>Chennimalai |


8. மாவட்ட / மாநில அளவில் கோச்சிங் கேம்ப் நடத்துவதற்கு EDAKA-க்கு ஒத்துழைப்பு வழங்கி உறுதுணையாக இருக்க வேண்டும்.

9. அனுபவமுள்ள பயிற்சியாளர்களை கொண்டு வீரர்கள், வீராங்கனைகளுக்கு பயிற்சி அளிக்க ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

10. தங்கள் ஊரில் மற்றும் அருகாமையில் உள்ள ஊர்களில், மாவட்ட மற்றும் மாநில கபாடி போட்டிகளை நடத்த விழாக்குழுவினர்க்கு தக்க ஆலோசனைகளையும், முழு ஒத்துழைப்பையும் வழங்க வேண்டும்.

11. உறுப்பினர்கள் அவரவர் வசிக்கும் பகுதிகளுக்கு அருகில் கபாடி போட்டி நடைபெறும் இடங்களில் தொடக்கம் முதல் இறுதி வரை மைதானத்தில் இருந்து விழாகமிட்டிக்கும், நடுவர்களுக்கும், வீரர்கள், வீராங்கனைகளுக்கும் உதவிகரமாக இருக்க வேண்டும்.

12. போட்டி நடைபெறும் இடங்களில் கபடி மைதானம், உபகரணங்கள் மருத்துவ வசதி போன்ற அடிப்படை தேவைகள் சரியாக உள்ளதா என அறிந்து அதனை விழாக்கமிட்டி மூலம் உறுதிபடுத்த வேண்டும்.

13. கிராம மற்றும் நகர பகுதிகளில் விளையாட்டு வசதிகளை உயர்த்துதல் மற்றும் இளம் வீரர்கள், வீராங்கனைகளை கபாடி பயிற்சி மேற்கொள்ள ஊக்குவிக்க வேண்டும்.

14. பெண்கள் கபடி போட்டிகளை நடத்தி பெண்கள் கபாடி வீராங்கனைகளை ஊக்குவிக்க வேண்டும்.

15. உறுப்பினர்கள் அவரவர் தாலுக்காவில் Under-14, Under-17, Under-19, போன்ற இளம் வயது பிரிவுகளில் போட்டிகளை நடத்தி சிறு வயதிலிருந்தே அணிகளை தயார் செய்ய வேண்டும்.

# ERODE DISTRICT AMATEUR KABADDI ASSOCIATION

(Affiliated to Tamilnadu Amateur Kabaddi Association)

No. 60, Saradhamariamman Kovil Street, Gobichettipalayam, Erode - 638 452.

| Chairman | President | Secretary (Incharge) | Treasurer | Organizing Secretary |
|---|---|---|---|---|
| **S.K.Ramasamy. LIC** | **P.Rajakumar** | **A.C.Thangavel** | **P.Vijayakumar** | **K.Gangadharan** |
| Sundakkapalayam | Gobichettipalayam<br>97892 23379<br>yazhinirajkumar2000@gmail.com | Joint Secretary<br>Chennimalai<br>99415 21256 | Erode<br>98427 53547 | Erode<br>**K.Velliangiri**<br>Chennimalai |


16. கபடி விளையாட்டு மூலம் பள்ளி,கல்லூரிகளில் கிடைக்கப்பெறும் இடஒதுக்கீடு பற்றி வீரர்கள் மற்றும் வீராங்கனைகளிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

17. மாணவர்களை கபாடி விளையாட்டில் ஈடுபடுத்த பள்ளி, கல்லூரிகளின் உடற்கல்வி இயக்குனர்களை அறிவுறுத்த வேண்டும்.

18. மாநில / தேசிய அணிகளுக்கு விளையாட திறமையான இளம் வீரர்கள், வீராங்கனைகளை உருவாக்க வேண்டும்.

**"கபடி விளையாட்டை அடிப்படை நிலையிலிருந்து மேம்பட்ட நிலைக்கு கொண்டு செல்லும் முக்கிய குழு தான் Development Committee."**

தலைவர்

P. [signature] 28/04/2026

(பெ.ராஜகுமார்)

ஈரோடு மாவட்ட அமெச்சூர் கபாடி அசோசியேஷன்.

செயலாளர்(பொறுப்பு) / பொருளாளர் மற்றும் நிர்வாகிகள்.

P. RAJAKUMAR
PRESIDENT
Erode Dt. Amateur Kabaddi Association
ERODE - 638 452.